## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 55-2016 | Date : 31.01.2025 | PW2 |
|---|---|---|
| Name: செந்தில்குமார் | S/o. **மாரிமுத்து** | |
| Evidence Recorded Time: 12.05 P.M. to 1.20 P.M. | | |

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

விபத்து சமயத்தில் டாடா ஏசி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் என்னுடைய ஓட்டுநர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வாகனத்தில் நான் பயணிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஓட்டுநர் சொல்லி தெரியும். விபத்து சமயத்தில் வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணம் செய்தார்கள் என்ற விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.மனுதாரர் லட்சுமணன் வாகனத்தை வாடகைக்கு எடுத்து சென்றபோது நான் எங்கிருந்தேன் என்றால் எனது வீட்டில் இருந்தேன். விபத்து சமயத்தில் எத்தனை நபர்கள் வாகனத்தில் பயணித்தார்கள் என்றும் வாகனத்தில் என்ன லோடு எடுத்து செல்லப்பட்டது என்றும், எவ்வாறு லோடு ஏற்றி எங்கிருந்து எங்கு சென்றார்கள் என்ற விவரங்கள் குறித்து காப்பீடு நிறுவனத்திற்கு நான் எழுத்து மூலமாக விவரம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் ஏதாவது உள்ளதா என்றால் காப்பீடு நிறுவனம் எழுத்துப் பூர்வமாக கேட்காததால் நான் கொடுக்கவில்லை. பொதுவாக வாகனத்தில் லோடு ஏற்றினால் மேற்படி லோடுடன் வாகனத்தை எடை பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வாகனத்தில் லோடுடன் எவ்வளவு எடை இருந்தது என்றும் லோடு இல்லாமல் எவ்வளவு எடை இருந்தது என்றும் நான் குறிப்பாக நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். மாங்காய் லோடு ஏற்றி சென்று உரிய இடத்தில் இறக்கிவிட்டு காலி ட்ரே எவ்வளவு இருந்த என்பது குறித்து எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது எந்த இடத்தில் இருந்து எந்த இடத்திற்கு மாங்காய் லோடு ஏற்றி செல்லப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. வாகனத்தில் எவ்வளவு லோடு ஏற்றப்பட்டது என்பது குறித்து எடை ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்டிப எடை ரசீதை மாங்காய் ஏற்றிச் செல்லும் உரிமையாளர் தான் எடை போட்டு வைத்து கொள்வார். அதை எங்களிடம் கொடுக்கமாட்டார். விபத்து குறித்து ஓட்டுநர் பிரகாசை விசாரித்தால் தான் விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் வாகனத்தில் மாங்காய் இறக்கி விட்டு காலி ட்ரேக்கள் எடுத்து வரவில்லை என்றும் வாகனத்தில் மாங்காய் மட்டும் தான் எடுத்து செல்லப்பட்டு உரிய இடத்தில் மாங்காய் லோடு இறக்கப்பட்டு வாகனம் ட்ரேக்கள் இல்லாமல் காலியாகத்தான்

வந்ததது என்றால் சரியல்ல. வழக்கமாக மாங்காய் லோடு ட்ரேவில் அடுக்கிதான் எடுத்து செல்வார்கள். ட்ரே இல்லாமல் அப்படியே லோடு ஏற்றினால் மாங்காய் அழுகிவிடும். நான் விபத்தை நேரில் பார்க்காத காரணத்தினாலும் வாகனத்தை வாடகைக்கு எடுத்து சென்றபோது நான் வீட்டில் இருந்த காரணத்தினாலும் விபத்து குறித்தும் வாகனத்தில் ட்ரேக்கள் இருந்ததா இல்லையா என்பது குறித்தும் எனக்கு விவரம் ஏதும் நேரடியாக தெரியாத காரணத்தினாலும் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்க சாட்சியம் அல்ல என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திலிருந்து காவல் ஆய்வாளர் எனக்கு விபத்து குறித்து போன் மூலம் தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு இருந்து ட்ரேக்களை வேறு வாகனத்தில் மாற்றி அனுப்பி வைத்தேன்.

ஒம்/–செந்தில்குமார்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.